


**அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! பி. ஸ்ரீராமுலு தலைமை! விவசாய தொழிலாளர் அணி – துறைமுகம் மேற்குப் பகுதி சார்பில்**

# கழக முப்பெரும் விழாவை முன்னிட்டு 200 திருநங்கைகளுக்கு ரூ 5000 உதவித்தொகை - 10 கிலோ அரிசி!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி – அ.ரியா வழங்கினர்!

சென்னை, செப்.22-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக விவசாய தொழிலாளர் அணி, துறைமுகம் மேற்கு பகுதி சார்பில் முன்னேற்றப் பாதையில் தி.மு.க.முப்பெரும் விழாவை முன்னிட்டு - 200 திருநங்கைகளுக்கு ரூ.5000 உதவிக் தொகை மற்றும் 10 கிலோ அரிசி, மளிகை பொருட்களின் தொகுப்பு ஆகிய நலத் திட்ட உதவிகளை - பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திருநங்கையர் நலவாரிய உறுப்பினர், தமிழ்நாடு அரசு மாநில மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர் அ.ரியா ஆகியோர் வழங்கி சிறப்பித்தனர்.



சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. விவசாய தொழிலாளர் அணி துறைமுகம் மேற்கு பகுதி சார்பில் முன்னேற்றப் பாதையில் தி.மு.க.முப்பெரும் விழாவை முன்னிட்டு "முப்பெரும் தொடர் -02" பாலினம் சமத்துவம் காப்போம்! சூரிய மகள்களாள் பூப்போம் எனும் தலைப்பில் மாபெரும் நலத்திட்டம் நேற்று (21.09.2025 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணியளவில், சென்னை, சௌகார் பேட்டை, திருப்பள்ளி தெரு, சிவாஞ்சி ஜெயின் பவனில் நடைபெற்றது.

இந்நலத்திட்ட விழாவில், 5வது மண்டல குழுத்தலைவர் பி.ஸ்ரீராமுலு எம்.சி தலைமை வகித்தார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், இரா.நரேந்திரன், எம்.விஜயகுமார், ஜி.எம்.தேவன், இசட். ஆசாத் எம்.சி, என்.பி.எம். சேக் அப்துல்லா, எல்.சம்பத் குமார், பி.விஜயகுமார், இரா. கலைச்செல்வி, பாஜெகதீஷ், எம்.வினாயகம், எம்.இப்ராஹிம்கனி, பா.பிரதீப்குமார் முன்னிலை வகித்தனர்.

துறைமுகம் மேற்கு / கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள்: மே.ஜனார்தனன், கே. ஆர்.அபரஞ்சி, ம.முத்துகுமார், ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ.தமிழ்வாணன், வி.சந்தானலட்சமி, சி.பெ. ஜெயராமன். துறைமுகம் மேற்கு / கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதீஷ்குமார், சேப்பாக்கம் வே.பா.பிரபாகரன், எல்.சத்தியநாராயணன், சு.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன். துறைமுகம் மாமன்ற உறுப்பினர்கள்: ராஜேஷ்ஜெயின், வெ.பரிமளம், எல். நவீன் வரவேற்றனர்.

இம்மாபெரும் நலத்திட்ட விழாவில் 200 திருநங்கைகளுக்கு ரூ.5000 உதவிக் தொகை மற்றும் 10 கிலோ அரிசி, மளிகை பொருட்களின் தொகுப்பு ஆகிய நலத் திட்ட உதவிகளை -பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திருநங்கையர் நலவாரிய உறுப்பினர், தமிழ்நாடு அரசு மாநில மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர் அ.ரியா ஆகியோர் வழங்கி சிறப்பித்தனர்.

மேலும், இந்நலத்திட்ட விழாவில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியாராஜன், துறைமுகம் மேற்கு கிழக்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள்: லண்டன்.க.முருகன், எல்.எழில்அரசு, ஜி.மாசிலாமணி எம்.வி.ஆர். சரவணக்குமார், எம்.நாராயணன், வி. எம். முருகவேல், வி.அசோக்குமார், டி.எஸ். சேகர், நா.ரஞ்சித், விஜயாலயன், கே.ஆர். மதன், ஏ.பி.எஸ். செந்தில்குமார், வி. சங்கர், எஸ்.கதிர்வேலு, ஆர்.தங்கமணி, ஏ.மதுசூதனன், பி.ஜி. சுகுமார், டி. சுபாஷ்சந்திரபோஸ் ஹாஜி, முகமதுஅலி, சேகர் (எ) பிரஸ் சேகர், வீடியோ.கே.சம்பத், எம்.சுரேஷ், பி.சகாயராஜ், மற்றும் கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்நலத்திட்ட விழாவில் பா.கதிரவன், மா.ஜெய்சங்கர், ஆர்.ரவிச்சந்திரன் நன்றி கூறினார்கள்.



கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் விருத்தாசலம் வானொலித் திடலில் நடைபெற்ற ”தமிழ்நாட்டை தலைகுனிய விட மாட்டேன் ஓரணியில் தமிழ்நாடு தீர்மான உறுதிமொழி ஏற்புக் கூட்டத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் தலைமையில் கழகத் தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் பத்மபிரியா கலந்துக் கொண்டு சிறப்புரை ஆற்றினார். உடன் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

**கத்தார் நாட்டின் தோகா மாநகரில் தி.மு.க. முப்பெரும் விழா:**

# தி.மு.க. அயலக அணி சார்பில் கத்தார் வாழ் தமிழர்களுக்கு மாபெரும் மருத்துவ முகாம்!

## ஷானவாஸ் பாவா – ரசீத் பங்கேற்பு! மதன்குமார் ஏற்பாட்டில் நிகழ்ச்சி!

தோகா, செப்.22-

கத்தார் நாட்டின் தோகா மாநகரில் தி.மு.க. முப்பெரும் விழா முன்னிட்டு வெள்ளிக்கிழமை அன்று கத்தார் தி.மு.க. அயலக அணி , வெளிநாடு வாழ் இந்திய தமிழர் நல சங்கம் (NRTIAQatar) மற்றும் REYADA மெடிக்கல் சென்டர் இணைந்து நடத்திய கத்தார் வாழ் தமிழர்களுக்கான மாபெரும் மருத்துவ முகாம் நடைபெற்றது.



இந்த சிறப்பு மருத்துவ முகாமில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான சிறப்பு மருத்துவ பரிசோதனை, பெண்களுக்கு சிறப்பு மருத்துவர் தலைமையில் மகப்பேறு மருத்துவ பரிசோதனை நடைபெற்றது.

கத்தார் அயலக அணி அமைப்பாளர் மதன்குமார் , துணை அமைப்பாளர்கள் அப்துல் ரஷீத், ஆரூர் பாலாஜி ,மேலூர் மதன்குமார், வாளடி ராஜ்குமார், கோபாலகிருஷ்ணன், பரந்தாமன், GSR சத்தியராஜ், ஹக்கீம் அபூபக்கர் , அவைத்தலைவர் முகமது ரபீக், பொருளாளர் சரவணன் மற்றும் சார்பு அணி நிர்வாகிகளான விக்னேஸ்வரன், அருள்குமார், குரும்பூர் தாஹிர், பவித்குமார், சபீர் கான், அசாருதீன், சுதானந்தம் அனைவரின் ஒத்துழைப்புடன் நடைபெற்றது.

இந்த மருத்துவ முகாமில் கத்தார் வாழ் தமிழர்கள் ஆண்கள், பெண்கள், தொழிலாளர்கள் என 200க்கும் மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டு மருத்துவ பரிசோதனை செய்து கொண்டார்கள்.

இந்த மருத்துவ முகாமிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக ICBF தலைவர் தஷானவாஸ் பாவா, ICBF துணை தலைவர் ரசீத், ICC நிர்வாகிகள், OTP, MKP நிர்வாகிகள், மருத்துவமனை மருத்துவர்கள் ,நிர்வாகிகள், பல்வேறு தமிழ் அமைப்புகளின் நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் மற்றும் கத்தார் அயலக அணி நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கழக அயலக அணி செயலாளர் எம்.எம். அப்துல்லா வழிகாட்டுதலுடன் கத்தார் தி.மு.க. அயலக அணி சார்பாக சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் கலந்து கொண்ட சிறப்பு விருந்தினர்கள், பொதுமக்கள், தொழிலாளர்கள் என அனைவரும் தமிழ் நாட்டை சிறப்பான முறையில் வழிநடத்திக் கொண்டிருக்கும் முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், ஏற்பாடு செய்த கத்தார் தி.மு.க. அயலக அணிக்கும்,REYADA மருத்துவமனைக்கும், பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டனர்.



காஞ்சிபுரத்தில் ஓரணியில் தமிழ்நாடு தீர்மானம் ஏற்பு கூட்டம் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ்.பாரதி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். உடன் அமைச்சர் ஆர்.காந்தி, சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், மாநில இளைஞரணி துணை செயலாளர் ப.அப்துல் மாலிக், மாநகர செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன், மாவட்ட பொருளாளர் சன் பிராண்ட். கே. ஆறுமுகம், மேயர் திருமதி.மகாலட்சுமி யுவராஜ், பகுதி செயலாளர் கே.திலகர் உள்ளிட்ட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.